செ.வெ.எண்: 950/2017 நாள்: 10.12.2017

கன்னியாகுமரி மாவட்டம்

ஓகி புயலினால் சேதமடைந்த நெடுஞ்சாலைத்துறை சாலைகள் முழுமையாக சீரமைக்கப்பட்டுள்ளன -

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

----

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஓகி புயலினால் பாதிக்கப்பட்ட சாலைகள் சீரமைப்பு பணிகள் குறித்து தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலினால் மாநில சாலைகளில் 9.800 கி.மீ நீளத்திற்கும், மாவட்ட முக்கிய சாலைகளில் 11.900 கி.மீ நீளத்திற்கும், மாவட்ட இதர சாலைகளில் 53.346 கி.மீ நீளத்திற்கும் சாலைகள் பழுதுபட்டிருந்தன. இதில் மாநில சாலைகளில் 9.800 கி.மீ நீளத்திற்கும், மாவட்ட முக்கிய சாலைகளில் 11.900 கி.மீ நீளத்திற்கும் சாலை சீரமைப்பு பணிகள் முழுமையாக முடிவடைந்துள்ளன. மாவட்ட இதர சாலைகளில் 52.000 கி.மீ நீளத்திற்கு சீரமைப்பு பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள சாலைகள் சீரமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

ஓகி புயலினால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாநில சாலைகளில் 37 மரங்களும், மாவட்ட முக்கிய சாலைகளில் 45 மரங்களும், மாவட்ட இதர சாலைகளில் 93 மரங்களும் மொத்தம் 175 மரங்கள் சேதமடைந்து சாய்ந்தன இவற்றில் சாலைகளில் விழுந்த 146 மரங்கள், கட்டடங்களில் மேல் விழுந்த 29 மரங்கள் உட்பட சேதமடைந்து சாய்ந்த 175 மரங்களும் முழுமையாக அகற்றப்பட்டு விட்டன.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கன்னியாகுமரி மாவட்டம்.